**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 316 நாள் : 11.10.2025**

**இன்று (11.10.2025) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள், அம்பத்தூர் மண்டலம், அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம் மில்லினியம் பூங்காவில் ரூபாய் 25 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள மகளிர் உடற்பயிற்சிக் கூடத்தினை திறந்து வைத்து, ரூபாய் 93 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள இறகுப் பந்து விளையாட்டு மைதானத்திற்கான பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல் வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள், அம்பத்தூர் மண்டலம், அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம் மில்லினியம் பூங்காவில் மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பின்படி, மூலதன நிதியின் கீழ் நவீன உடற்பயிற்சி சாதனங்களுடன் ரூபாய் 25 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள மகளிர் உடற்பயிற்சிக் கூடத்தினை இன்று (11.10.2025) திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

இதனைத் தொடர்ந்து, இப்பூங்காவில் மாண்புமிகு மேயர் அவர்களின் சிறப்பு நிதியின் கீழ் ரூபாய் 93 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள இறகுப் பந்து விளையாட்டு மைதானத்திற்கான பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்தார். பின்னர், இப்பூங்காவில் தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவி தொகுப்புகளை வழங்கி, மரக்கன்றினை நட்டார்.

இந்நிகழ்வுகளில், மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜோசப் சாமுவேல், மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு. எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., நிலைக்குழு தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, அம்பத்தூர் மண்டலக்குழு தலைவர் திரு.பி.கே.மூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி ஜி.வி.நாகவள்ளி பிரபாகரன், திருமதி சா. உமா, மண்டல அலுவலர் ஆர். ஏ. பிரபாகர் மற்றும் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**